தமிழீழ அரசியல்துறை
POLITICAL WING OF TAMILEELAM
https://thamileelaarasiyalthurai.info
tat.info.international@gmail.com
+(44) 0734 983 8393

நிர்வாகம் **TAT20260131-13T**
தமிழீழ அரசியல் துறை
அனைத்து நாடுகள்
31-01-2026

# விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு. தொல் திருமாவளவன் அவர்களுக்கான கண்டன அறிக்கை!

அன்புக்குரிய தமிழ் பேசும் மக்களே!
ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் அதன் தலைமையின் உண்மைத் தன்மையினாலும் நேர்மையினாலும் உலகம் முழுவதும் இன்றும் வியந்து பார்க்கப்படுகின்றது. பல்லாயிரம் உயிர்களை ஆகுதியாக்கி, தியாகத்தின் வழி நடந்த, இந்த மாபெரும் விடுதலைப் போராட்டத்தின் உன்னத தலைவர் மீது அண்மையில் நேரடியாக ஒரு பெரும் பழியை சுமத்தி, எங்களின் விடுதலைப் போராட்டத்தின் மகத்துவத்தை கொச்சைப் படுத்த முயலும் தென்னிந்திய அரசியல்வாதி தொல் திருமாவளவனை உலகெங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழினம் வன்மையாகக் கண்டிக்கின்றது. தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் தன்னுடைய வாழ்க்கைத் துணையைத் திருமணம் செய்வதற்கு ‘சாதியம்’ தடையாக இருந்ததாகவும், அதையும் தாண்டி அந்தத் திருமணத்தை நடத்துவதற்காகதான் பதின்னான்கு பேரை வல்வெட்டித்துறையில் வைத்து சுட்டுத்தள்ளிய பின்னரே அந்தத் திருமணத்தை நடத்த முடிந்ததாகவும் தலைவர் அவர்கள் கூறியதாக இயல்பாகவே, உண்மைக்கு புறம்பாக பொய் பேசும் திருமாவளவனின் பேச்சால் கொதித்துப் போயிருக்கிறார்கள் தமிழ்மக்கள். அதிலும் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களே தன்னைத் தனியாக அழைத்துச் சென்று இந்த சம்பவத்தைக் கூறினார்கள் என்று கதை அளந்திருக்கும் திருமாவளவன், தலைவரை “தனியாக ” எந்தக் காலத்திலும் சந்தித்ததில்லை என்ற உண்மையை இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் உலகறியக் கூறுகின்றோம்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பெரும் அரசமைத்து ,பேரோடும் புகழோடும் வாழ்ந்து வந்த தமிழ் இனம், அன்னியர்களின் தொடர் படையெடுப்புக்களால் சிதைந்து, அடிமை நிலைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், குறிப்பாக ஈழத்தில் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கோரப்பிடிக்குள் சிக்கி, சொல்லொணா துயரங்களை அனுபவித்துக் கொண்டிருந்த போது, அந்தத் தமிழ் மக்களையும் மண்ணையும் காப்பாற்றுவதற்காக போராடிய எம் முன்னோர்களின் அறவழிப் போராட்டங்கள் அனைத்தும், சிங்களப் பேரினவாதிகளால் நசுக்கப்பட்ட வேளையில்தான், எமது தேசியத் தலைவர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தார். நேர்மையும்,கண்ணியமும், சுய ஒழுக்கம், கட்டுப்பாட்டையும் கொண்ட எம் தமிழீழத் தேசியத் தலைவர் அவ்வாறே விடுதலைப்புலிகள் அமைப்பையும் வழி நடத்தினார். சாதி, மத, வர்க்க வேறுபாடுகளற்ற மண் விடுதலையோடு பெண்ணிய விடுதலையையும் அடிப்படையாகக் கொண்டே அவர் எமது விடுதலைப் போராட்டத்தை வழி நடத்தினார்.

1983 இடம் பெற்ற இனக்கலவரத்தினால், சிங்கள பகுதியில் கல்வி கற்ற தமிழ் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியில் தடை ஏற்பட்டது. அங்கு பயின்ற பல்கலைக்கழக (கட்டுபெத்த,பேராதனை,கொழும்பு,மொறட்டுவ ) மாணவர்களினால் உருவான “இடம் பெயர்ந்த மாணவர் ஒன்றியம்” மூலம் அதாவது சிங்கள பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும், தமிழ் மாணவருக்கான பல்கலைக்கழகங்கள் தமிழ் பகுதியிலேயே ஆரம்பிக்க வேண்டும் என கோரிக்கையை வைத்து சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டனர். ஆரம்பிக்கப்பட்ட மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தை இலங்கையரசு கண்டு கொள்ளாது போகவே, உடல்நிலையையும், பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் அன்றைய யதார்த்த நிலையை உண்ணாவிரத மாணவர்களுக்கு விளக்கி கூறிய போது, அவர்கள் இலங்கையில் பாதுகாப்பாக இருக்க முடியாது என்பதை உணர்ந்து, தங்களை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லும்படி வேண்டியதற்கு அமைவாகவே, இந்தியாவிற்கு அழைத்து வரப்பட்டனர்.

தமிழீழத் தேசியத் தலைவரின் துணைவியான மதிவதனி அவர்களும் அந்த மாணவிகளில் ஒருவர். தலைவர் அவர்களின் நன் நடத்தையினால் கவரப்பட்ட அவர் தலைவரைத் திருமணம் செய்யும் தன்னுடைய விருப்பத்தை தெரிவித்த போது, தலைவர் அவர்கள் அதனை உடனேயே மறுதலித்து விட்டார். பின்னர் மதியுரைஞர் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம், திருமதிஅடேல் பாலசிங்கம், திரு பேபி சுப்பிரமணியம் போன்ற மத்திய குழு உறுப்பினர்கள் “வரும் காலங்களில் இயக்க உறுப்பினர்கள் திருமணம் செய்யத்தான் வேண்டும்” என ஆலோசனை கூறி அவரை வற்புறுத்திய பின்னர், ஒரு கட்டத்தில் எளிமையாக மதிவதனி அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்.



தமிழீழ அரசியல்துறை - அனைத்து நாடுகள்
தமிழீழ அரசியல்துறை - ஐக்கிய இராச்சியம் தமிழீழ அரசியல்துறை - கனடா தமிழீழ அரசியல்துறை - சுவிச்சர்லாந்து தமிழீழ அரசியல்துறை - பிரான்சு
தமிழீழ அரசியல்துறை - அவுஸ்திரேலியா தமிழீழ அரசியல்துறை - யேர்மனி தமிழீழ அரசியல்துறை - நியூசிலாந்து தமிழீழ அரசியல்துறை - அமெரிக்கா
தமிழீழ அரசியல்துறை - ஸ்கொட்லாந்து தமிழீழ அரசியல்துறை - நோர்வே தமிழீழ அரசியல்துறை - டென்மார்க் தமிழீழ அரசியல்துறை - பின்லாந்து

https://thamileelaarasiyalthurai.info
tat.info.international@gmail.com
+(44) 0734 983 8393



இத்திருமணத்தை மதிவதனி அவர்களின் குடும்பத்தினர்கள், உறவினர்கள், சம்மதித்து எதிர்க்காத போதும், ஏன் இவ்வாறான அவதூறுகளைத் தொல் திருமாவளவன் போன்றோர் பரப்ப வேண்டும். இவையனைத்தும் இந்தியாவில் தமிழ் நாட்டில் நடந்தது. அவ்வாறிருக்க, திருமணத்துக்காக வல்வெட்டித்துறையில் சாதியின் பெயரால் கொலை செய்ததாக பழி சுமத்தும் தொல் திருமாவளவன் தன்னுடைய நாட்டில் நடந்த வரலாற்றைக் கூட அறியாமல் பிதற்றுகின்றாரா? இல்லை இவரை யாராவது பின்னிருந்து இயக்குகின்றார்களா? என எண்ணத் தோன்றுன்கிறது.

தமிழீழத் தேசியத் தலைவர் எப்போது தொல் திருமாவளவனை தனியாகச் சந்தித்தார்? மகிந்த ராஜபக்சவுக்கு தானே வலியச் சென்று கைலாகு கொடுத்து விட்டு, தனக்கு அவரே கைலாகு தந்ததாக பிதற்றிய கதை போலத்தான் தமிழீழத் தேசியத்தலைவர் தன்னிடம் கூறியதாக கூறுவதும், உங்கள் கட்சிகளை வளர்க்க வேண்டுமாயின், உங்கள் நாட்டைப் பற்றியும், உங்கள் கொள்கைகள் பற்றியும் கூறுங்கள் மாசு மறுவற்ற, நேர்மையும், கண்ணியமும், உச்சக் கட்ட தியாகம் புரிந்த, எம் தமிழீழத் தேசியத் தலைவர் கூறியதாக பொய்க் கதைகள் புனைய எவருக்கும் உரிமையில்லை இவ்வுலகில் தமிழினத்தை, உலகறியச் செய்த பெருமையும் எம் தமிழீழத் தேசியத் தலைவரை மாத்திரமே சாரும். இவரைப் போன்ற ஒரு தலைவரைப் பூமிப்பந்தில் எங்கும் காண முடியாது. எமது தேசியத்தலைவர் பற்றியும், தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரம், தியாகம், மனவுறுதி, போரிடும் ஆற்றல் பற்றியும் இன்றும் உலகம் அறிய முடியாமல் ஆராய்ந்து கொண்டிருக்கிறது எம் தமிழீழத் தேசியத் தலைவர் மீது அவதூறு, கூறுவதை முதலில் நிறுத்துங்கள் எம் தலைவர் வழி வந்த நாம் கண்ணியமற்ற சொற்களை பயன்படுத்த விரும்பவில்லை.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் ஓரம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும், தொல் திருமாவளவன் அதில் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்காகவே பிதற்றுகிறார், என்பது பட்டவர்த்தனமாகத் தெரிகின்றது. இவரையும், இவர் போன்று தமிழீழத் தேசியத் தலைவரையும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மீதும், களங்கம் கற்பிக்க முனைபவர்களையும் மிக வன்மையாக கண்டிப்பதோடு, இவ்வாறான இழிச் செயல்களை உடனடியாக நிறுத்துமாறு தமிழீழ அரசியல்துறையினராகிய நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

## “தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்”

திரு. கி. நல்லையா
நிர்வாகப் பொறுப்பாளர்
தமிழீழ அரசியல்துறை
அனைத்து நாடுகள்

திருமதி ச. அசோகா
பொறுப்பாளர்
தமிழீழ அரசியல்துறை
அனைத்து நாடுகள்